செய்தி வெளியீடு எண்: 158 நாள்: 24.02.2020

## செய்தி வெளியீடு

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் 72–வது பிறந்தநாளையொட்டி, தமிழ்நாடு முழுவதும் 72 லட்சம் மரக்கன்றுகள் நடவு செய்யும் பொருட்டு, மாபெரும் மரக்கன்றுகள் நடும் திட்டத்தினை துவக்கி வைக்கும் அடையாளமாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி K. பழனிசாமி அவர்கள் இன்று (24.2.2020) சென்னை, தலைமைச் செயலகம் எதிரில் மகிழம் மரக்கன்றினை நட்டு, திட்டத்தினை துவக்கி வைத்தார்கள்.

தமிழ்நாட்டில் வனம் மற்றும் மரங்களின் பரப்பை அதிகரித்து, பசுமைப் போர்வையை மேம்படுத்தும் உன்னத நோக்கிலும், வனப்பகுதியில் மட்டுமின்றி வனத்திற்கு வெளியே இருக்கும் காலியிடங்களில் அதிக எண்ணிக்கையில் மரக்கன்றுகளை நட்டு வளர்க்கவும் மாபெரும் மரக்கன்றுகள் நடும் திட்டத்தை தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருகிறது. மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பிறந்த நாளையொட்டி தமிழ்நாடு முழுவதும், கடந்த 2012–ஆம் ஆண்டு 64 லட்சம் மரக்கன்றுகளும், 2013–ஆம் ஆண்டு 65 லட்சம் மரக்கன்றுகளும், 2014–ஆம் ஆண்டு 66 லட்சம் மரக்கன்றுகளும், 2015–ஆம் ஆண்டு 67 லட்சம் மரக்கன்றுகளும், 2016–ஆம் ஆண்டு 68 லட்சம் மரக்கன்றுகளும், 2017–ஆம் ஆண்டு 69 லட்சம் மரக்கன்றுகளும், 2018–ஆம் ஆண்டு 70 லட்சம் மரக்கன்றுகளும், 2019–ஆம் ஆண்டு 71 லட்சம் மரக்கன்றுகளும் நடப்பட்டு இத்திட்டம் வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இந்த திட்டத்திற்கு பல்வேறு தரப்பினரிடையே மிகுந்த வரவேற்பு உள்ளதால், இந்த ஆண்டும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் 72–வது பிறந்த நாளையொட்டி மாபெரும் மரக்கன்றுகள் நடும் திட்டத்தின் கீழ் தமிழ்நாடு முழுவதும் 72 லட்சம் மரக்கன்றுகள் நடப்படும்.

இந்த மரக்கன்றுகளை நடும் பணியானது பிப்ரவரி மாதம் தொடங்கப்பட்டு டிசம்பர் மாதத்திற்குள் முடிக்கப்படும். மேலும், இம்மரக்கன்றுகள் வனப்பகுதிகளிலும், பள்ளிகள் மற்றும் கல்லூரிகளிலும், அரசு மற்றும் தனியார் அலுவலக வளாகங்களிலும், சாலையோரங்களிலும், பூங்காக்களிலும், பெரிய அளவிலான குடியிருப்புகளிலும் நடப்பட்டு பராமரித்து பாதுகாக்கப்படும்.

இத்திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டு பருவநிலை மற்றும் மண்வளத்திற்கு ஏற்ற மரக்கன்றுகளான ஆல், இலுப்பை, புன்னை, மந்தாரை, புங்கன், மகிழம், பூவரசு, வேம்பு போன்ற பல்வேறு மரக்கன்றுகள் நடப்படும். இந்த மாபெரும் மரக்கன்றுகள் நடும் திட்டம், சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை ஆகிய துறைகளால் இணைத்து செயல்படுத்தப்படும்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.ஓ. பன்னீர்செல்வம், மாண்புமிகு வனத்துறை அமைச்சர் திரு.திண்டுக்கல் சி. சீனிவாசன், மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்பு திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் திரு.எஸ்.பி. வேலுமணி, மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைச் செயலாளர் திரு. க. சண்முகம், இ.ஆ.ப., ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திரு.ஹன்ஸ் ராஜ் வர்மா, இ.ஆ.ப., சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை முதன்மைச் செயலாளர் திரு.ஷம்பு கல்லோலிகர், இ.ஆ.ப., முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் (துறைத் தலைவர்) முனைவர் பெ. துரைராசு, இ.வ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

* * * * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**
**நாள்: 24.2.2020**